**உரித்துக் காப்புறுதி நிதியம் - 2021**

-----------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

உரித்துக் காப்புறுதி நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரைக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும் நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2009 இன் 01 ஆம் இலக்க உரித்துக்களை பதிவுசெய்தல் கட்டளைகள் (காப்புறுதி நிதிகள்) | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | இல. 42 (ஆ) | உரித்துப் பதிவாளர்கள் உரித்துக்களை பதிவுசெய்தல் வருமானம் தொடர்பான அறிக்கைகளை 02 வாரங்களுக்கு ஒருமுறை தலைமை அலுவலகத்திற்கு வழங்க வேண்டிய போதிலும் கணக்காய்வு அறிக்கை திகதியில் உள்ளவாறு 2021 ஆம் ஆண்டுக்காக வழங்கத் தவறிய அறிக்கைகளின் எண்ணிக்கை 94 ஆகும். | சில உரித்துப் பதிவு அலுவலகங்கள் உரிய அறிக்கைகளை வழங்காததால் இந் நிலைமை அறிக்கையிடப்பட்டுள்ளது. | வருமானங்கள் சரியாக அறிக்கையிடப்பட வேண்டும். |
| (ii) | இல. 42 (உ) | ஒவ்வொரு 14 நாட்களின் இறுதியிலும் உரித்துப் பதிவாளர்களால் சேகரிக்கப்படும் பணத்தைப் பதிவாளர் நாயகம் முதன்மை காசுப் புத்தகத்தில் தனித்தனியாகப் வரவு வைக்க வேண்டிய போதிலும் அனைத்து உரித்துப் பதிவாளர் அலுவலகங்களினதும் மொத்த நாளாந்த வருமானம் ஒவ்வொரு நாளும் காசுப் புத்தகத்தில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | வங்கி ஏடுகளின் பிரகாரம் ஒவ்வொரு அலுவலகத்திலும் பதிவுசெய்தல் நடைமுறையில் சிக்கலாக இருந்தது. | -மேற்படி- |
| (iii) | இல. 42 (ஏ) (4) | ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் உரித்துப் பதிவாளர் நாயகத்தின் காசுப் புத்தகத்திலோ அல்லது வங்கிக் கணக்கிலோ மீதி எதுவும் இருக்கக்கூடாத போதிலும் 2021 மே, யூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் காசப்புத்தகத்தில் | 2021 மே மாதத்திற்கான வருமானத்தை குறைவாகக் கணக்கீடு செய்தமை, யூலை மாதத்தில் ரூபா 9,000 ஆல் குறைவாகக் காசோலையை எழுதியமை மற்றும் ஆகஸ்ட் மாதத்தில் இனங்காணப்படாத ரூபா 203,800 தொகை அறிக்கையிடப்பட்டமை என்பன இதற்குக் காரணமாகும். | இது குறிப்பிடப்பட்ட கட்டளைகளுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உள்ள மீதிகள் முறையே ரூபா 270, ரூபா 9,000 மற்றும் ரூபா 203,800 ஆக காணப்பட்டன. | | |
| (ஆ) | 2016 சனவரி 28 ஆம் திகதிய DMA/2019/(I)(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் ஆகக்குறைந்தது காலாண்டுக்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டில் ஒரு கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டுள்ளது. | பட்டியலிட்டவாறு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கான வாய்ப்பு காணப்படாதமை காரணமாக இந் நிலைமை ஏற்பட்டிருந்தது. | குறிப்பிடப்பட்ட கட்டளையுடன் இணங்குதல் வேண்டும். |

## 1.6 முதலீட்டு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பணமாக மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் மற்றும் முதலீடுகளின் முதிர்ச்சியிலிருந்து பெறப்பட்ட பணத்தை காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளிடுவதற்குப் பதிலாக, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியத்தின் ரூபா 97,189,304 மொத்த முதலீட்டு பெறுமதி காசு உட்பாய்ச்சல்களாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 109,581,704 தொகையான பெறுமதி காசு வெளிப்பாயச்சல்களாக குறிப்பிடப்பட்டிருந்தது. திறைசேரி பிணைமுறிக் கணக்கின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட பிணைமுறி பெறுமதி ரூபா 29,946,394 ஆக காணப்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டில் முதிர்ச்சியடைந்திருந்த பிணைமுறி பெறுமதி ரூபா 16,834,600 ஆக காணப்பட்டது. | 2021.01.01 இல் உள்ளவாறான பிணைமுறிகளின் பெறுமதி ரூபா 97,189,303 ஆக காணப்பட்டதுடன் ஆண்டின் போதான புதிய முதலீடுகள் ரூபா 29,946,394 ஆக காணப்பட்டது. ஆண்டின் போது முதிர்ச்சியடைந்திருந்த பிணைமுறிகளின் பெறுமதி ரூபா 16,834,600 ஆக காணப்பட்டது. | நியமத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 21,449,550 மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 18,201,794 ஆக காணப்பட்டது. அதற்கிணங்க மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 3,247,756 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. உரித்துக்களை பதிவு செய்வதிலிருந்தான வருமானம் ரூபா 2,583,976 ஆல் அதிகரித்தமை மற்றும் திறைசேரி பிணைமுறி வட்டி வருமானம் ரூபா 757,354 ஆல் அதிகரித்தமை என்பன இம் முன்னேற்றத்திற்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 அலுவலகங்களில் நடாத்தப்பட்ட கணக்காய்வு பரீட்சிப்புக்களின் பிரகாரம் 3 அலுவலகங்களால் (கம்பளை, மாத்தளை மற்றும் மாத்தறை) தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட உரித்துக்களை பதிவுசெய்தல் வருமான அறிக்கைகள் 2009 இன் 01 ஆம் இலக்க உரித்துக்களை பதிவுசெய்தல் (காப்புறுதி நிதியம்) கட்டளையின் 42 (ஆ) மற்றும் (இ) இன் பிரகாரமான “RGT/IF 03” படிவத்துடன் இணங்கியிருக்காத போதிலும் அறிக்கைகளை சரியான படிவத்தில் அழைப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கைய எடுத்திருக்கவில்லை. | உரிய பதிவேட்டை பேணுவதற்கு 15 நாட்களுக்கு ஒருமுறை அறிக்கையொன்றை வழங்குவதற்கான கோரிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பட்டியலிட்டவாறு அனைத்து அறிக்கைகளையும் பெற்றுக்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. | இது குறிப்பிடப்பட்ட கட்டளைகளுடன் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | உரித்துப் பதிவாளர்களின் அலுவலகங்களில் இருந்து பெறப்படும் அறிக்கைகளை தலைமை அலுவலகத்திற்கு உள்ளிடுவதற்கு குறித்த கட்டளை இல. 42 (ஆ) இற்கு இணங்க படிவ இல. “R.G.T/I.F. 02” இன் பிரகாரம் பதிவேடொன்று பேணப்பட வேண்டிய போதிலும் உரிய படிவத்தின் பிரகாரம் அந்தப் பதிவேட்டைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | படிவம் R/G.T/I.F. 02 ஆனது உரித்துப் பதிவாளர்களால் சேகரிக்கப்பட்ட பணத்தின் பதிவேடொன்றாக உள்ளதுடன் உரித்துக்களை பதிவுசெய்யும் அலுவலகங்களின் அனைத்து வருமானங்கள் பற்றிய தகவல்களையும் கொண்டு வருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அந்த அறிக்கைகளின் அடிப்படையில், தலைமை | குறிப்பிடப்பட்ட படிவத்துடன் இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலகம் ஒரு அறிக்கையைத் தயாரிக்கிறது, மேலும் அனைத்து பதிவுகளும் கிடைக்காததால், உரிய பதிவேட்டைத் சரியாக நாளதுவரையாக்க முடியவில்லை. | |
| (இ) | பதிவாளர் நாயக திணைக்களத்தின் வளாகமும் அதன் வளங்களும் நிதியத்தின் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற போதிலும், அதற்காக மேற்கொள்ளப்படும் மின்சாரம், நீர் மற்றும் தொலைபேசிச் செலவினங்களை நிதியத்தின் நிர்வாகச் செலினங்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவாளர் நாயக திணைக்களத்தின் வளாகங்கள் மற்றும் வளங்கள் நிதியத்தின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றதுடன் காப்புறுதி நிதியத்தின் செயற்பாடுகளை தனித்தனியாக கணிப்பீடு செய்வது நடைமுறையில் சிக்கலாக உள்ளதென முகாமைத்துவ சபைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | சரியான செலவினங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் ஒவ்வொரு மாதத்திற்கான உரித்துக்களை பதிவுசெய்தல் வருமானக் கூற்றுக்களில் ரூபா 6,292,564 கூட்டுமொத்தமான இனங்காணப்படாத வருமானம் இருப்பதால் வருமானம் பெறப்பட்ட நோக்கத்தை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரித்துப் பதிவாளர் அலுவலகங்கள் 02 வாரங்களுக்கு ஒருமுறை வருமானப் பதிவேட்டை வழங்குகிறதுடன், சில அலுவலகங்கள் உரிய பதிவேடுகளைச் சமர்ப்பிக்காததால் இந்நிலைமை பதிவாகியுள்ளது. | சரியான வருமானம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | முன்னைய ஆண்டில் கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட பிழையை தேறிய சொத்துக்கள் கூற்றில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல், அந்த சீராக்கங்களை செய்த பின்னரான ரூபா 91,409,664 மீதி உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் திரண்ட நிதியத்தின் ஆரம்ப மீதியாக காட்டப்பட்டுள்ளது. | 2019 ஆம் ஆண்டில் பதிவாளர் நாயகத்தின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய தொகை தவறுதலாக உரித்துப் பதிவாளர் நாயகத்தின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததால் 2021 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அது சீர்செய்யப்பட்டு கணக்குகளில் சரியாக திருத்தம் செய்யப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் சரியான தரவு பதிவுசெய்யப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1998 இன் 21 ஆம் இலக்க உரித்துக்களை பதிவுசெய்தல் சட்டத்தின் கீழ் காணி உரித்துறுதிகளின் உரிமைத்துவத்தை பதிவு செய்தல் தொடர்பாக தவறான தீர்மானம் வழங்கப்பட்டதன் காரணமாக பங்குதாரர்களுக்கு ஏற்பட்ட நட்டங்களிற்காக அரசாங்கத்தால் இழப்பீடு வழங்குதல் நிதியத்தின் ஆரம்ப நோக்கமாக உள்ள போதிலும் 2010 இல் நிதியம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து மீளாய்வாண்டு வரையில் அந் நோக்கம் தொடர்பான எந்த விதமான செயற்பாடும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் எந்தவொரு இழப்பீட்டு நட்டங்களும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | காணி உரித்துக்களை நிர்ணயித்தல் திணைக்களமானது உரித்தப் பதிவு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக பொதுமக்களுக்குத் தெரிவிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. உரித்துக் காப்புறுதி நிதியத்திலிருந்து இழப்பீடு வழங்குவது நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுவதால், வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இழப்பீட்டை வழங்குதல் தொடர்பான தகவல்களை உள்ளடக்க முடியவில்லை. | நிதியத்தின் ஆரம்ப நோக்கத்தை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டில் உரித்தப் பதிவாளர் நாயகத்தால் 37,558 உரித்துச் சான்றிதழ்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன, மேலும் நிதியம் தொடங்கியதிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை வழங்கப்பட்ட மொத்த சான்றிதழ்களின் எண்ணிக்கை 746,416 ஆகும். | 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட காணித் துண்டுகளின் எண்ணிக்கை 37,558 ஆக உள்ளதுடன் உரித்துக்களை பதிவுசெய்தல் தொடங்கிய திகதியிலிருந்து 2021.12.31 வரை 746,416 காணித்துண்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. | போதுமான செயலாற்றல் மட்டம் பேணப்பட வேண்டும். |